OS 125/2023

வா.சா.3 ராமமூர்த்தி த/பெ துளசி

நாள் 12.08.2025

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எத்தனை வயது என்றால் 72 வயதாகும். நான் பத்திர எழுத்தர் ஆவேன். பத்திரம் எழுதுவதற்கான உரிமம் எண்.2053/1984 ஆகும். எனது வீடு எங்கு இருக்கிறது என்றால் பள்ளிக்கூடத்தெரு ஆரணியில் இருக்கிறது. எனது முதன்மை வாக்குமூலத்தில் நான் பத்திர எழுத்தர் என்றும் எனது உரிமம் எண் குறித்தும் சொல்லிருக்கிறேனா என்றால் சொல்லிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ1 நான் எழுதினேனா என்றால் நான் எழுதவில்லை சேகர் என்பவர் எழுதினார். நான் சாட்சி கையொப்பம் போட்டேன். சேகர் என்பவர் பத்திர எழுத்தர் அவருக்கு ஆவணம் எழுத உரிமம் இல்லை. பத்திரகாப்பி எழுதுவதற்கு உரிமம் உள்ளது. வா.சா.ஆ1ல் சேகரின் உரிமம் எண் போடவில்லை என்றால் சரிதான். எனது சாட்சி கையொப்பத்திற்கு மேலே சாட்சி கையொப்பம் இட்டவர் தேவராஜ் நைனார் ஆவார். அவர் எங்கு இருக்கிறார் என்றால் உயிருடன் இல்லை.

2. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் எத்தனை பக்கம் உடையது என்றால் 3 பக்கம் உடையது. 3 பக்கத்திற்கும் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை கடைசி பக்கத்தில் செய்திருக்கிறேன். ஆவணத்தில் என்ன சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எதற்காக எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அக்ரிமெண்ட் மாதிரி போடப்பட்டு கிரையம் எழுதப்பட்டது. யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் அண்ணன் தம்பிக்கு எழுதிகொடுத்தார். அண்ணன் பெயர் பலராமன், தம்பி பெயர் தெரியாது. ஆவணம் எழுதிய சேகர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். நான் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் காலை 09.30 மணிக்கு வந்தேன் என்றால் மாலை சார் பதிவாளர் அலுவலகம் மூடும் வரை இருப்பேன் என்றால் சரிதான். பொதுவாக சொத்து கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். புறம்போக்கு நிலம் என்பதால் பதிவு செய்யவில்லை.

3. பத்திர எழுத்தர் ஆகிய நான் எந்த ஆவணத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்யக்கூடாது. சேகரும் நானும் நண்பர்கள்ஆவோம். சேகர் கேட்டுக்கொண்டதன் பேரில் வா.சா.ஆ1ல் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் செய்ய எவ்வளவு பணம் வாங்கினேன் என்றால் பணம் எதுவும் வாங்கவில்லை. நான் முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதியில் ஆவணம் எழுதப்படவில்லை என்றாலும் நான் அதில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. தவறான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.